**MCOP. No. 4967/2017** **DATE:09.12.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr.SivaGanesh

Father/Husband Name : Mr.Linga Durai

Age :42

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 9th day of December 2025.

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் பின்வரும் ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| மசாஆ 1 | PARVATHY HOSPITAL ACCIDENT REGISTER |
| மசாஆ 2 | MERCURY HOSPITAL REPORT |
| மசாஆ 3 | FIR |
| மசாஆ 4 | POSTMORTEM CERTIFICATE |
| மசாஆ 5 | DEATH REPORT |
| மசாஆ 6 | DEATH CERTIFICATE |
| மசாஆ 7 | LEGAL HEIR CERTIFICATE OF LINGA DURAI (DECEASED) |
| மசாஆ 8 | DEATH CERTIFICATE SIVANANDHA SEKAR (2ND PETITIONER) |
| மசாஆ 9 | DEATH CERTIFICATE SATHYA (4TH PETITIONER) |
| மசாஆ 10 | LEGAL HEIR OF SATHYA (4TH PETITIONER) |
| மசாஆ 11 | BILL BOOKS OF THE WATCH CO |
| மசாஆ 12 | MEDICAL BILLS OF PARVATHY HOSPITAL |

| | |
|---|---|
| | MEDICAL BILLS OF MERCURY HOSPITAL |
| மசாஆ 13 | AADHAAR CARD OF THE PETITIONERS |
| மசாஆ 14 | BANK PASS BOOK OF THE PETITIONERS |

அவை மசாஆ 1 முதல் 14 வரை குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தில் இறந்து போனவர் உங்கள் தகப்பனார் என்றால் சரிதான். இறக்கும் போது உங்கள் தந்தையில் வயது என்ன என்றால் 63 வயது. விபத்து குறித்து யார் புகார் கொடுத்தது என்றால் என்னுடைய சித்தப்பா புகார் கொடுத்தார். நீங்கள் தாக்கல் செய்துள்ள மசாஆ 4 ல் உடற்கூறாய்வு அறிக்கையில் உங்கள் தந்தையின் வயது 67 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக உங்கள் தந்தையின் வயது 63 என பொய்யாக கூறுகிறீர்கள்என்றால் சரியல்ல. உங்கள் தகப்பனார் எந்த வாகனத்தில் செல்லும்போது விபத்துஏற்ப்பட்டது என்றால் HONDA ACtiva வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்ப்பபட்டது. விபத்து சமயத்தில் உங்கள் தகப்பனாருக்கு இருசக்கரவாகனத்தை ஒட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல இருக்கிறது ஆனால் அதை தாக்க்ல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வாகனம் மோதி உங்கள் தந்தை இறந்து விட்டார் என்றால் ஈச்சர் வாகனம் மோதி இறந்து விட்டார். மசாஆ 1 விபத்து பதிவேட்டு நகலில் இருசக்கரவாகனம்மீது டாடா ஏஸ் மோதி விபத்து ஏற்்ப்பட்டது என்றால் சரியல்ல. மசாஆ 4 ல் உங்கள் தந்தை தலையில் ஏற்ப்பட்ட காயத்தினால் இறப்பு ஏற்ப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் தலையில் தலைக்கவசம் அணியாததால் தான் தலையில் காயம் ஏற்ப்பட்டது என்றால் சரிதான். உங்கள் தந்தையின் வயது, தொழில், வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்கள் தந்தைக்கு மருத்துவ காப்பீடு இருந்ததா என்றால் இல்லை. நீங்கள் மருத்துவ காப்பீடு மூலம் மருத்துவ செலவுகளை பெற்றுவிட்டீர்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக இல்லை என கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் மனுவில் குறி்ப்பிடப்பட்டுள்ள 6 முதல் 8 வரை உள்ள மனுதாரர்கள் உங்கள் தந்தையின் வாரிசுதாரர்கள் இல்லை என்றா்ல் சரியல்ல.

உங்கள் தந்தையின் வருமானத்தை சார்ந்து இந்த மனுதாரர்கள் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து உங்கள் தந்தை இருசக்கர வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால் தான் ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை , குற்ற இறுதி அறிக்கை,வரைபடம் ஆகியவற்றை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:09.12.2025.

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.